இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 03-05-2025

# காக்கும் காவல் அரண் முதல்வர்!

தமிழ்நாடு சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கைக்கு பதில் அளித்து உரையாற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அருமையான ஒரு வாதத்தை வைத்தார்கள்.

“தமிழ்நாடு எந்தெந்த வகையில் எல்லாம் வளர்ந்திருக்கிறது - தங்கள் துறை எவ்வளவு வளர்ந்துள்ளது என்பதை - ஒவ்வொரு அமைச்சர்களும் பெருமையோடு குறிப்பிட்டார்கள். அவர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். உங்கள் துறையை வளர்தெடுத்தது - உங்கள் திறமையாக இருந்தாலும் - இந்த வளர்ச்சிக்கு அடிப்படையான முக்கியமான காரணம் ஒன்று இருக்கிறது. அதுதான் மாநிலத்தின் அமைதி ஆகும். அமைதியான மாநிலத்தில்தான் தொழில் வளரும். தொழிற்சாலைகள் வரும். கல்வி மேம்படும். பெண்கள் வளர்ச்சி ஏற்படும். இளைஞர்கள் முன்னேற்றம் ஏற்படும். விளையாட்டுத் துறை மேம்படும். உற்பத்தி அதிகம் ஆகும். ஏற்றுமதி அதிகம் ஆகும். சுற்றுலா வளரும். புதிய புதிய மேம்பாட்டைப் பார்க்கலாம். அமைதி இல்லாத - சட்டம் ஒழுங்கு சரியில்லாத மாநிலத்தில் இத்தகைய வளர்ச்சியை நாம் பார்க்க முடியாது. அனைத்து விதமான வளர்ச்சியையும் தமிழ்நாடு அடைய அமைதிமிகு மாநிலமாக தமிழ்நாடு இருந்ததுதான் காரணம். சட்டம் ஒழுங்கு சீராக இருந்தது தான் காரணம்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

**ஒரு மாநிலத்தின் நல்லாட்சிக்கு இலக்கணம் என்பது அந்த மாநிலத்தின் அமைதிதான். தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை. மதக் கலவரங்கள் இல்லை. பெரும் கலவரங்கள் இல்லை. ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தின் - ஒரு குறிப்பிட்ட ஊரின் உள் அமைதியைக் கெடுக்கும் செயல்கள் ஏதுமில்லை. தொடர்ச்சியான அச்சுறுத்தல் இல்லை. தொடர் வன்முறை இல்லை. இவை இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு என்று சொல்ல முடியும். இவை எதுவும் இல்லை, இல்லை, இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு சட்டம் ஒழுங்கு சீராக இருக்கிறது. தமிழ்நாடு முதலமைச்சரின் மிகச் சிறந்த கவனமான நிர்வாகம்தான் இதற்குக் காரணம்.**

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்று ஒன்றிய அரசே சொல்லி இருக்கிறது. ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சி அமைச்சகம் சார்பில் சட்டம் - ஒழுங்கு பற்றிய ஷ்யாமா பிரசாத் முகர்ஜி ரூர்பன் மிஷன் சார்பில் மாதம் தோறும் தரவரிசை செய்யப்பட்டு வெளியிடப்பட்டு வருகிறது. அதன்படி 10-07-2024 இன் அறிக்கை வெளியாகி உள்ளது. இந்தத் தரவு அடிப்படையில் சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ள மாநிலங்களில், இந்திய அளவில் தமிழ்நாடுதான் முதல் இடத்தில் உள்ளது.

அதாவது 95.47 புள்ளிகளைப் பெற்று சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதில் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு முத்திரை பதித்துள்ளது. 2வது இடத்தை 93.96 புள்ளிகளைப் பெற்று மிசோரம் பிடித்துள்ளது. 3வது இடத்தில் தெலுங்கானா உள்ளது. அதாவது 91.86 புள்ளிகளைப் பெற்றுள்ளது இந்த மாநிலம். உத்தரப்பிரதேசம் 91.00 புள்ளிகள் பெற்றும் 4வது இடத்தில் இருக்கின்றது. கடந்த 30 ஆண்டுகளாக பா.ஜ.க. ஆண்டு வரும் குஜராத் மாநிலம் இந்தப் பட்டியலில் 80.46 புள்ளிகள் பெற்று 10ஆவது இடத்தில் உள்ளது.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சரியாக இருக்கிறது என்பது ஒன்றிய அரசே ஒப்புக் கொண்ட உண்மையாகும்.

2017-2020 ஆம் ஆண்டில், கொலை வழக்குகள் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக அதிகரித்து வந்தது. 2024 ஆம் ஆண்டில் மிகக் குறைந்த கொலை வழக்குகள் பதிவாகியுள்ளன. காவல்துறை எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், கடந்த 6 ஆண்டுகளில் மிகக் குறைந்த ரவுடி கொலைகள் பதிவாகியுள்ளன. சாதி மற்றும் பழிவாங்கும் நோக்கம் கொண்ட கொலைகள் குறைந்துள்ளன. இந்திய அளவில் கொலைகளுக்கான குற்ற விகிதம் 2.2 ஆகும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 2024 ஆம் ஆண்டிற்கான கொலைகளுக்கான குற்ற விகிதம் 1.9 மட்டுமே.

**காவல்துறையினர் மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் காரணமாக, 2023 ஆம் ஆண்டை விட 2024 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கொலைகள், காய வழக்குகள் குற்றங்கள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்துள்ளன. சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளில் காவல்துறை சுதந்திரமாகச் செயல்பட்டு, குற்றவாளிகள் யாராக இருந்தாலும், எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.**

பொதுமக்கள் அதிகளவில் கூடும் திருவிழாக்கள் அனைத்தும் அமைதியாக நடந்துள்ளது. பல்வேறு சமூகத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களாக இருந்தாலும், கோவில் திருவிழாக்களாக இருந்தாலும் அமைதியாக நடந்துள்ளது. சர்ச்சைக்குரிய நாட்களை அமைதியாகக் கடந்திருக்கிறோம். பிரச்சினைகள் இல்லாமல் வைத்திருக்கிறோம். வகுப்புவாதம், மத அடிப்படைவாதம், சாதியவாதம் ஆகியவை வன்முறைக்கு அடித்தளம் இடுவதை முற்றிலுமாகத் தடுத்திருக்கிறார் முதலமைச்சர்.

**போதைப்பொருட்கள், தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள், மாநிலங்களுக்கிடையேயான குற்றச் செயல்கள் இணையவழிக் குற்றங்கள் ஆகியவற்றை கடுமையாக ஒடுக்கி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். போதை மருந்து விற்பனையாளர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டு வருகின்றன.**

**“குற்றங்களைக் குறைக்கும் துறையாக மட்டும் இல்லாமல் குற்றங்களைத் தடுக்கும் துறையாகச் செயல்பட வேண்டும்” என்று முதலமைச்சர் கட்டளையிட்டதால்தான் தமிழ்நாடு பாதுகாப்பான மாநிலமாக இருக்கிறது. அதனால்தான் அனைத்துத் துறைகளிலும் தமிழ்நாடு வளர்கிறது.**

செப்டம்பர் -6 காவலர் நாள் என்று அறிவித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். இது காவல் அரசு ஆகும்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.4.2025 அன்று சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் என்.ஆர். இளங்கோ அவர்களின் மகள் ராகவி இளங்கோ – ஏ.கே. சச்சிந்தர் ஆகியோரது திருமண உறுதியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவர் துறைமுகம் காஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### ‘சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்’ என்ற ஒன்றிய அரசின் அறிவிப்பு –

# தி.மு.கழகம் போராடிப் பெற்ற வெற்றியாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மே 3-**

**சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பு தமிழ்நாடு அரசும் தி.மு.கழகமும் போராடிப் பெற்ற வெற்றியாகும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.**

**ஒன்றிய அரசு சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று அறிவித்துள்ளதையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு :**

மிகவும் தேவையான சாதிவாரிக் கணக்கெடுப்பைத் தவிர்க்கவும் தாமதிக்கவும் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றதால், ஒரு வழியாக ஒன்றிய பா.ஜ.க. அரசு அடுத்த மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரிக் கணக்கெடுப்பும் சேர்த்து நடத்தப்படும் என்று அறிவித்துள்ளது.

ஆனால், முக்கியமான வினாக்களுக்கு இன்னும் விடையில்லை. இந்தக் கணக்கெடுப்பு எப்போது தொடங்கும்? எப்போது முடிவுறும்? இவர்கள் இதனைத் தற்போது அறிவித்திருப்பது ஒன்றும் தற்செயலானது அல்ல. பிகார் மாநிலத் தேர்தலில் சமூகநீதி விவகாரம் ஓங்கி ஒலிப்பதால் தான், சந்தர்ப்பவாத நடவடிக்கையாக தற்போது இதனை அறிவித்திருக்கிறார்கள்.

நாம் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பைக் கோரியபோது, “மக்களைப் பிளவுபடுத்துகிறார்கள்” என நம் மீது குற்றம்சாட்டிய அதே பிரதமர் அவர்கள், அவர் தொடர்ச்சியாகத் தூற்றிய அதே கோரிக்கைக்கு இப்போது பணிந்துவிட்டார். முறையாகத் திட்டங்களை வகுப்பதற்கும், மக்கள்நலத் திட்டங்கள் சரியான பயனாளிகளைச் சென்றடைவதற்கும், மெய்யான சமூகநீதியை அடையவும் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு இன்றியமையாததாகும். அநீதிக்குத் தீர்வு காணவேண்டு மென்றால் முதலில் அதன் அளவை அறிந்தாக வேண்டும்!

இன்றைய அறிவிப்பு தமிழ்நாடு அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் போராடிப் பெற்ற வெற்றி ஆகும். முதன்முதலாக நாம்தான் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை வலியுறுத்திச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி னோம். அனைத்துத் தளங்களிலும் இதனை வலியுறுத்தினோம். ஒவ்வொரு முறை பிரதமர் அவர்களை நேரில் சந்திக்கும்போதும், பலமுறை கடிதங்கள் எழுதியும் இதனை ஒன்றிய அரசு தனது பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்தினோம்.

மாநில அளவில் சாதிவாரிக் கணக்கெடுப்பு எடுக்கலாம் எனச் சிலர் கோரியபோது கூட, நாம்தான் உறுதியாகச் சொன்னோம்: மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பொறுப்பு. ஒன்றிய அரசுதான் இதனை நாடு தழுவிய அளவில் மேற்கொள்ள முடியும், அதுதான் சென்சஸ் சட்டப்படி சட்டரீதி யாகவும் செல்லும் என்றோம். நமது நிலைப்பாடு சரி என இன்று நிறுவப்பட்டுள்ளது.

திராவிட மாடலின் வழியே சமூகநீதிக்கான எங்கள் பயணத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், நாம் அங்கம் வகிக்கும் இந்தியா கூட்டணிக்கும், இது மற்றுமொரு வெற்றியாகும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

### ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்! – அதற்கு

# இந்த ‘மே தினம்’ நமக்கு ஊக்கத்தினை வழங்கட்டும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘மே தின’ வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மே 3 -**

**‘ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்! அதற்கு இந்த மே தினம் மேலும் நமக்கு ஊக்கத்தினை வழங்கட்டும்!’ என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மே தின வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மே தின வாழ்த்துச் செய்தி வருமாறு-

“நிறையுழைப்புத் தோள்களெலாம் எவரின் தோள்கள்?

கற்பிளந்து மலைபிளந்து கனிகள் வெட்டிக் கருவியெலாம் செய்துதந்த கைதான் யார் கை?” என்று பாவேந்தர் பாரதிதாசன் தொழிலாளத் தோழர்களின் மகத்துவத்தைப் போற்றினார்!

உலகினை உழைப்பால் செலுத்தும், உலகினுக்குத் தங்கள் வியர்வையால் உயிரூட்டும் பாட்டாளி வர்க்கத்தினருக்கு எனது உழைப்பாளர் நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்காக மே நாளில் ஊதியத்துடன் கூடிய விடுமுறை, சென்னையில் மே தினப் பூங்கா, தொழிலாளர் நல வாரியம் என எண்ணற்ற பங்களிப்புகளைக் கழக ஆட்சிதோறும் பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் செய்து வந்தனர்.

அப்பெருந்தலைவர்களின் வழி நடக்கும், நமது திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றதில் இருந்து ஏராளமான, இந்தியாவுக்கே வழிகாட்டும் பல தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடந்த ஓராண்டில் செய்யப்பட்ட குறிப்பிடத்தகுந்த சாதனைகளைச் சொல்ல வேண்டுமென்றால்,

தமிழ்நாடு உப்பளத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் ஸ்விகி, ஸொமாட்டோ, அமேசான் போன்றவை வாயிலாகப் பொருட்கள் விநியோகம் மற்றும் சேவைகள் வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழி லாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நலவாரியமும் உருவாக்கப் பட்டது.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (Gig) நல வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 2,000 தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் (Gig) தொழிலாளர்களுக்கு ரூபாய் 4 கோடி செலவில் புதியதாக eScooter வாங்கும் செலவினத்தில் தலா ரூ.20,000/ மானியமாக வழங்கும் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் 1.5 இலட்சம் கிக் தொழிலாளர்களுக்குக் குழுக் காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்துவதுடன், அவர்கள் பணிகளுக்கிடையே ஓய்வு எடுக்கும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய ஓய்வுக் கூடங்கள் சென்னை, கோவை உள்ளிட்ட பெருநகரங்களில் உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பாக, தமிழ்நாடு அமைப்பு சாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள பெண்கள் / திருநங்கைகள் 1,500 பேருக்கு புதிய ஆட்டோ ரிக்சா வாகனம் வாங்கும் செலவினத்தில் ரூ.1 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

பதிவு பெற்ற அமைப்பு சாரா தொழில்களில் 4,37,750 தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் ரூ.1200/ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் நலன் கருதி, தொழிலாளர் ஆணையர் தலைமையில் மாநில அளவிலான புலம்பெயர்ந்த தொழிலாளர் ஆலோசனைக் குழுவும், கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் தலைமையில் மண்டல அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களையும் அரசு அமைத்துள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதிலும், கொத்தடிமைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதிலும், முனைப்பான நடவடிக்கைகளை நமது அரசு எடுத்து வருகிறது.

அனைத்துத் துறை அலுவலர்களுடன் ஒன்றிணைந்து குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அமலாக்க அலுவலர்களால் 34,335 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 60 குழந்தை தொழிலாளர்களும், 283 வளரிளம் பருவத் தொழிலாளர்களும், 120 கொத்தடிமைத் தொழிலாளர்களும் மீட்கப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் தொழிலாளர் முறையினையும் 2030ஆம் ஆண்டிற்குள் கொத்தடிமைத் தொழிலாளர் முறையினையும் தமிழ்நாட்டில் அறவே அகற்றிட உறுதிபூண்டு செயலாற்றி வருகிறோம்.

இவற்றுக்கெல்லாம் மகுடம் வைத்ததுபோல், “‘உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள், நீங்கள் இழப்பதற்குக் கை விலங்குகளைத் தவிர எதுவுமில்லை” என அழைத்த உலக மாமேதை கார்ல் மார்க்சுக்குச் சென்னையில் சிலை அமைக்கப்படும் என அண்மையில் நடைபெற்று முடிந்த சட்டப்பேரவைக் கூட்டத்தொடரில் அறிவித்தேன்.

இந்தியாவிலேயே தொழிற்சங்கச் செயல்பாடுகளுக்கு முன்னோடியாக இருந்த மாநகரம் சென்னை. மே நாள் இந்தியாவில் முதன்முதலில் கொண்டாடப்பட்டதும் இங்குதான். இந்திய மொழிகளிலேயே தமிழில்தான் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை முதன்முதலாக மொழிபெயர்த்து தந்தை பெரியார் அவர்களால் வெளியிடப்பட்டது. அத்தகைய மண்ணில் மாமேதை மார்க்ஸ் சிலை அமையவுள்ளது.

இப்படி, சொல்லாலும் - செயலாலும் - வரலாற்றுச் சின்னங்களாலும் உழைப்பாளர்களையும் உழைப்பையும் போற்றும் ஆட்சியாகத் தமிழ்நாட்டில் திராவிட மாடல் அரசு நடைபோடுகிறது. உழைப்பாளர்களின் நலன் காக்கும் நமது முயற்சிகள் தொடரும், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்! அதற்கு இந்த மே தினம் மேலும் நமக்கு ஊக்கத்தினை வழங்கட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது மே தின வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

## பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்** இன்று (03-05-2025 சனிக்கிழமை) காலை 10.30 மணி அளவில், சென்னை, கலைஞர் அரங்கில் நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள்** : கழக ஆக்கப் பணிகள்

“அண்ணா அறிவாலயம்”
சென்னை 600 018

**துரைமுருகன்,**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.